- Rainfed rice cultivation requires good tilth for uniform sowing of seeds by using tractor drawn seed cum fertilizer seed drill. For direct rice seeding the field has be ploughed to fine tilth and blanking should be given before taking up sowing. By using the tractor drawn seed cum fertilizer seed drill the rice seeds and the recommended basal dose of phosphorus as DAP can be placed to a depth of 2.5 to 3.0 cm with out overlapping as pre monsoon sowing. The seeds and the applied fertilizer will be automatically covered by the iron rod passing behind the seed drill. In this method of sowing a seed rate of 75 kg $ha^{-1}$ will be required to cover one hectare of land as against the seed rate of 100 kg $ha^{-1}$ required for the farmer's method of sowing.

## Benefits

Seed cum fertilizer seed drill sowing is one of the best option to increase the productivity of rainfed direct seeded rice crop in the coastal district of Ramanathapuram This technology has many advantages as listed below

- A saving of seed rate by 25 kg / ha
- Proper placement of seed and fertilizer to a depth of 2.5 cm helps to get better and deeper root system which favours better utilization of moisture and thus the crop is able to withstand the drought in better way.
- Line sowing favours easy hand weeding and introduction of mechanical weeding is also possible in this system and thereby reduces the cost on weeding.
- Uniform and optimum plant population maintenance is possible by adopting this technology which will result in higher grain yield with net returns

## Economics

- Seed cum fertilizer drill sowing crop recorded the highest net return of Rs.13,152/- compared to Rs.7,772/- registered in farmer's method of sowing with higher B:C ratio of 2.35.

## Scientists responsible for release

- S.Mahendran, M.Ramasamy and D.Anantha Krishnan

## 2. இளம் வயது நாற்றுக்களை திருந்திய நெல் சாகுபடி முறையில் நடுவதற்கு உகந்த திருந்திய நெற்பயிர் பாய் நாற்றங்கால்

### தொழில் நுட்ப விளக்கம்

- *"திருந்திய நெல் சாகுபடி" என்ற ஒருங்கிணைந்த நெற்பயிர் நிர்வாகத்தில் அடிப்படை தேவையான வீரிய இளம் நாற்றுக்களை 15 நாட்களில் உற்பத்தி செய்வதற்காக திருந்திய நெற் பயிர் பாய் நாற்றங்கால் உருவாக்கப்பட்டது.*
- *நல்ல வடிகால் வசதியுள்ள, நீர் ஆதாரத்திற்கு அருகாமையில் உள்ள இடம் பாய் நாற்றங்காலுக்கு ஏற்றது. ஒரு எக்டர் நடவிற்கு100 ச.மீ பாய் நாற்றங்கால் தேவைப்படும். முதலில் 1.2 மீட்டர் அகலம் 100 மீட்டர் நீளம் (வசதிக்கேற்ற நீளம்) மற்றும் 5 செ.மீ உயரம் உள்ள மேட்டுப் பாத்திகள் அமைத்துக் கொள்ள வேண்டும். இது முதல் 5 நாள் வரை தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவும் விதைத்த 6 ம் நாள் முதல் 13 ம் நாள் வரை நாற்றுக்கள் நனையும் வகையில் சிக்கனமாக நீர் தேக்கி வைக்கவும் உதவும். இதன் மேல் பழைய பாலித்தீன் உரச் சாக்குகள் அல்லது உலர்ந்த வாழை சருகுகளை விரிக்க வேண்டும். அதன் மேல் 1மீ அகலம் 0.5 மீ நீளமுள்ள விதைச்சட்டத்தை வைக்க வேண்டும். இந்த விதைப்புச் சட்டத்தின் அளவுகள் நம் வசதிக்கேற்ப அமைத்துக் கொள்ளலாம். விதைப்பிற்காக பிரஸ்மட் எனப்படும் கரும்பு ஆலைக் கழிவு மற்றும் வயல் மண் சம அளவில் கலந்த கலவையை பயன்படுத்தலாம். அல்லது வயல் மண் வளமாக இருந்தால் வேறு அங்கக உரங்கள் எதுவும் கலக்க வேண்டிய அவசியமில்லை. நன்கு மக்கிய குப்பை எருவாக இருப்பின் ஒரு சதுர மீட்டர் பாய் நாற்றங்காலுக்குத் தேவைப்படும் வயல் மண்ணுடன் ஒரு கிலோ என்ற அளவில் கலந்து விதைப்பிற்காக பயன்படுத்தலாம். தூள் செய்யப்பட்ட*

டிஏபி உரத்தை ஒரு கிலோ கலவைக்கு 0.5 கிராம் என்ற அளவில் (சதுர மீட்டருக்கு 25 கிராம்) இட்டு நன்கு கலக்க வேண்டும். நன்கு முளை கட்டிய இரண்டாம் கொம்பு விதைகளை ஒரு ச.மீ பரப்பளவுள்ள நாற்றங்காலுக்கு 50 கிராம் உலர்ந்த விதை அல்லது முளைகட்டிய விதையாக இருந்தால் 100 கிராம் என்ற அளவில் விதைக்க வேண்டும். நெற்பயிரின் இரகம் மற்றும் தானியத்தின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து எக்டேருக்கு 5 முதல் 8 கிலோ வரை விதை தேவைப்படும். விதைப்புச் சட்டத்திற்குள் டிஏபி உரம் கலந்த கலவையை பரப்பி அதன் மேல் நன்கு முளைவிட்ட இரண்டாங்கொம்பு நெல் விதைகளை சீராகத் தூவ வேண்டும். விதைத்த பின் விதையின்மேல் மண் கலவையை தூவி மூடி உள்ளங்கைகளால் மெதுவாக அழுத்திவிட வேண்டும். பூவாளி கொண்டு சளிக்க தண்ணீர் தெளித்த பின் விதைச் சட்டத்தை மெதுவாக வெளியில் எடுக்க வேண்டும். இதுபோல் தொடர்ந்து விதைப்பு செய்ய வேண்டும். முதல் 5 நாட்கள் வரை காலையிலும் மாலையிலும் பாய் நாற்றங்கால் நன்கு நனையும் வகையில் பூவாளியால் தண்ணீர் தெளிக்க வேண்டும். 6 ஆம் நாள் முதல், பாத்திகளை சுற்றி உள்ள வாய்க்காலில் நாற்றுப் படுக்கைகள் நன்கு நனையும் வகையில் நீர் கட்டி வைக்க வேண்டும். விதைத்த 9 ஆம் நாள் மாலை நேரத்தில் 0.5 சதம் யூரியா கரைசலை (50 கிராம் யூரியாவை 10 லிட்டர் நீரில் கலக்க வேண்டும்) பூவாளி மூலம் நாற்றங்கால் நன்கு நனையும் வரை ஊற்ற வேண்டும். 15ஆம் நாள் நன்கு வளர்ந்த (16 முதல் 18 செ.மீ) வாளிப்பான 4-5 இலைகள் மற்றும் நெல் உறையுடன் (உமி) கூடிய நாற்றுக்கள் நடவிற்கு தயாராக இருக்கும். சிறிய படுக்கைகளில் உள்ள நாற்றுக்களை, பெண் தொழிலாளர்களைக் கொண்டே நடவு வயலுக்கு எடுத்துச் செல்லலாம். நடவு வயலில் நாற்றுப் படுக்கைகளிலிருந்து ஒற்றை நாற்றுக்களை வேர் அறுபடாமல் எளிதாகப் பிரித்தெடுத்து நடவிற்கு பயன்படுத்தலாம்.

**நன்மைகள்**

- 15 நாட்களில் நன்கு வளர்ச்சியடைந்த வாளிப்பான நாற்றுகள்
- 18-20 செ.மீ உயர நாற்றுக்கள் - நாற்றுக்கு 4-5 இலைகள்

- குறைந்த இடுபொருள் (விதை, உரம், கூலி ஆட்கள்) செலவு தண்ணீர் சிக்கனம்
- எளிதாக நாற்றுக்களை நடவு வயலுக்கு எடுத்துச் சென்று வேர் அறுபடாமல் நாற்றுக்களை பிரித்தெடுக்கலாம்.

**பொருளாதாரம்**

- இம்முறையின் மூலம் 85-90 சதம் விதை அளவையும், 90 சதம் உரச் செலவையும், 34 சதம் கூலியாட்கள் தேவையையும் மற்றும் 55 சதம் தண்ணீர்த் தேவையையும் குறைக்க முடியும்.
- ஒரு எக்டருக்கான நாற்றங்கால் செலவில் சுமார் ரூ.1600 வரை செலவைக் குறைக்க முடிகிறது.
- மொத்தத்தில் வழக்கத்தில் உள்ள நன்செய் நாற்றங்காலுக்கு ஆகும் செலவில் 50 சதம் குறைக்க முடியும்.

## 2. MODIFIED RICE MAT NURSERY FOR EARLY TRANSPLANTATION UNDER MODIFIED SRI METHOD OF CULTIVATION

### Details of Technology

- In the conventional wet bed nursery, seedlings do not attain the expected size (15 to 20-cm height) even at 25-30 days after seeding (DAS) because of invariably high seeding rate and poor nursery management. Therefore we decided to develop a modified rice mat nursery (MRMN) for producing robust, healthy rice seedlings in 15 days time suitable for transplantation with single seedling per hill.
- Shallow raised beds to a height of 5 cm and width of 1.2 m are to be raised in the field or any convenient place having water facility and free from animal trespass. The length of the bed can be of any convenient size. 100 $m^2$ mat nursery is required to produce seedlings that are sufficient for planting one ha of field. Native field soil alone(if very fertile) or soil + pressmud mixture (1:1) or soil + well decomposed FYM (1 kg FYM mixed with the soil required for 1 $m^2$ nursery bed) are identified as suitable seed bed medium to take up sowing. The 4 cm

thick seed-bed medium blended with well-powdered DAP (20-25 g for 1 $m^2$ seed-bed medium) is to be poured inside a pre-fabricated wooden seed frame placed over the polyethylene layer or used fertilizer gunnies. The pre-germinated seeds at the rate of 5-8 kg/ha are to be sown in the 100 $m^2$ seed-bed (50-g dry seed or 100 g wet seed per $m^2$) depending upon the variety and germination percent of the seed. Then, seeds should be properly covered using the same seed-bed medium, gently pressed with hand, sprinkled with water uniformly to saturate the medium. The seed frame is to be carefully removed and the sowing process continued till the required area was sown. The mat nursery is to be sprinkled with water 2-3 times a day up to 5 days after sowing using a rose can. After 5$^{th}$ day, water can be let in between the mat nursery beds to keep the beds soaked, but not submerged. On 9$^{th}$ day of sowing 0.5% urea solution (50 g in 10 lit of water) may be drenched over the seedling bed with the help of a rose can. Water should be drained two days prior to lifting and transportation of seedling mats to the main field for transplanting.

**Benefits**

- Production of robust seedlings in 15 days
- 18-20 cm tall seedlings with 4-5 leaves
- Saving of cost on seed, labour, fertilizer & water

**Economics**

- Reduced the cost on seed by 85- 90%, fertilizer by 90%, labour by 34% and water use by 55%.
- Limited land use
- The cost of seedling production to plant 1 ha of main field is reduced by about Rs.1600/-
- Saving of 50% of cost when compared to conventional wet bed nursery.

**Scientists responsible for release**

- R.Rajendran, V.Ravi, N.Chelliah, T.Jayaraj, B.Chandrasekaran, S.Ramanathan and V. Balasubramanian

## 3. சொட்டு நீர் உர பாசனம் மற்றும் குழி நடவு முறையில் கரும்பு சாகுபடி

### தொழில் நுட்ப விளக்கம்

- *குழிகளுக்கு இடையேயான இடைவெளி : **1.5** x **1.5** மீ*
- *குழிகளின் எண்ணிக்கை : **4,444** குழிகள் / எக்*
- *குழியின் விட்டம் : **0.9** மீ*
- *குழியின் ஆழம் : **0.3** மீ*
- *கரணைகளின் எண்ணிக்கை : **32** ஒரு பரு கரணைகள் / குழி கம்போஸ்ட் மற்றும் வயல் மண்ணுடன் சேர்ந்து **15** செ.மீ. வரை குழிகளில் நிரப்ப வேண்டும். விதைக்கரணைகளை குழியின் வெளிப்புறத்தில் இருந்து **10** செ.மீ உள்ளடக்கி ஒரே சீராக வட்ட வடிவில் நடவு செய்ய வேண்டும். கரும்பு நட்ட **50** முதல் **60** வது நாளில் சிறிது மண் அணைத்து குழிகளை சிறிதளவு நிரப்ப வேண்டும். பிறகு **90-120** வது நாளில் குழிகளைத் தரை மட்டத்திற்கு கீழ் **2.5** செ.மீ பள்ளம் விட்டு மண் நிரப்ப வேண்டும்.*
- *உர அளவு :* 275:62.5:112.5 *கிலோ தழை, மணி, சாம்பல் சத்து / எக்*
  *பரிந்துரைக்கப்பட்ட மணிச்சத்தினை அடியுரமாக இடவேண்டும். பரிந்துரைக்கப்பட்ட தழை மற்றும் சாம்பல் சத்தினை யூரியா மற்றும் பொட்டாஷ் உரமாக (வெள்ளை பொட்டாஷ்) **14** சம பாகமாக பிரித்து நட்ட **15** முதல் **210** நாட்கள் வரை **15** நாட்கள் இடைவெளியில் 'வென்சுரி' மூலம் கொடுக்க வேண்டும்.*
- *சொட்டு நீர் அமைப்பு: குழி நடவு முறையில் பக்க குழாய்களை இரண்டு வரிசைகளுக்கு இடையில் அமைப்பதன் மூலம் **3** மீட்டருக்கு ஒரு பக்க குழாய் அமைய வேண்டும். பக்க குழாய்களில் இருந்து ஒவ்வொரு குழிக்கும் குறுகிய பக்க குழாய்களை ஒரு மீட்டர் நீளத்தில் எடுத்து குழாய்களின் முனைகளில் ஒரு மணி நேரத்திற்கு **8** லிட்டர் நீர் தரக்கூடிய நீர் சொட்டிகளை அமைக்க வேண்டும்.*

- நீர்பாசனம் தினமும் அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாள் மண்ணின் தன்மைக்கேற்ப நீர்ப் பாய்ச்ச வேண்டும்.

**நன்மைகள்**

- அதிக மகசூல்
- மறு தாம்பு பயிர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு
- பிரச்சனைக்குரிய நிலங்களுக்கு ஏற்ற தொழில் நுட்பம்
- நீர் சிக்கனம்
- உபகரணங்களை பராமரிப்பது எளிது
- பின்செய் நடவுக்கு குறைவான வேலையாட்கள்
- அதிக நிகர இலாபம்

**பொருளாதாரம்**

- குழி நடவு முறையில் ஆராய்ச்சிகள் செய்ததில் குழிக்கு குழி 1.5மீ x 1.5மீ இடைவெளியில் குழிகளை 3 அடி விட்டத்திலும், $1^1/_4$ அடி ஆழத்திலும் அமைத்து குழிக்கு 32 ஒருபருகரணைகளை நடவு செய்து பார்த்ததில் ஹெக்டேர் ஒன்றுக்கு நிகர இலாபமாக ரூ. 1,19,649 மற்றும் ரூ.1,55,982/- மற்றும் வரவு செலவு விகிதம் 2.26 மற்றும் 3.31 என நடவு கரும்பு பயிர் மற்றும் மறுதாம்பு பயிரில் கிடைத்துள்ளது. சாதாரண கரும்பு நடவுமுறையினை இக்குழி நடவு முறையுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது சாதாரண கரும்பு நடவுமுறையில் நிகர இலாபமாக ரூ. 1,16,650/- மற்றும் ரூ.1,27,360/- மட்டுமே நடவு மற்றும் மறுதாம்பு பயிர்களில் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே இந்த குழி நடவு முறையில் சொட்டு நீர் உர நிர்வாகம் செய்வதன் மூலம் அதிக நிகர லாபம் பெற்றிட முடியும்.

## 3. PIT METHOD OF SUGARCANE PLANTING UNDER DRIP FERTIGATION SYSTEM

### Details of Technology

- Pit to pit spacing : 1.5 x 1.5 m
- No. of pits/ha : 4,444 pits
- Pit diameter : 0.9 m
- Pit depth : 0.38 m
- No. of budded setts / pit : 32 (Single budded setts)
  Fill the pits to a depth of 15 cm with compost and native soil and mix it well. Place the healthy setts in circular fashion leaving 10 cm from the outer boundary of the pits with equal spacing between each setts and cover the setts with soil. On 50 to 60 days after planting give partial earthing up by sliding the soil from the outer boundary of the pit and full earthing up should be given leaving a depression of 2.5 cm from the ground level at 90 to 100 days after planting.
- Fertilizer dose : 275:62.5:112.5kg NPK/ha
  The entire phosphorous dose can be applied as basal at the time of planting. The nitrogen and potassium as urea and MOP (White potash) should be applied through fertigation system in 14 equal splits starting from 15 DAP upto 210 DAP
- Drip design : Lateral to lateral spacing 3.0 m (Alternate rows)
  8 mm micro tubes on either side of the lateral to a length of 1.0 m with one 8 LPH drippers / pit.
- Irrigation : Daily or in alternative days

### Benefits

- Higher cane yield
- Multi rationing is possible
- Suited in problem soils
- More water saving
- System maintenance is easy
- Less labour for after cultivation operations
- Higher net return

**Economics**

- Pit planting of cane in 1.5 m x 1.5 m pit spacing registered the highest net return of Rs.1,19,649 ha$^{-1}$ and 1,55,982 ha$^{-1}$with in B:C ratio of 2.26 and 3.31 in plant and ratoon crops respectively compared to the net return of Rs1,16,650 and 1,27,360 registered in conventional method of cane cultivation in plant and ratoon crops.

**Scientists responsible for release**

- S.Mahendran, S.Ramanathan, P.Rajarathinam, R.Jeyasrinivas and V.Murugappan

# 4. கறிவேப்பிலைக்கு நுண் தெளிப்பு நீர்ப்பாசனம்

## தொழில் நுட்ப விளக்கம்

- *கறிவேப்பிலைக்கு நுண் தெளிப்பு நீர்ப் பாசன முறையில் மணல் கலந்த வண்டல் மண் நிலங்களில், இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தொட்டி நீர் ஆவியாதலில் 40 விழுக்காடு அளவிற்கு, இணை வரிசை முறையில் செடிகளை நடவு செய்து, பாசனம் அளித்தல்.*
- *இணை வரிசை முறை: வரிசைக்கு வரிசை 0.75 மீ இடைவெளியும் இணை வரிசைகளுக்கு இடையில் 1.25 மீ. இடைவெளியும் அமைத்து, ஒவ்வொரு வரிசையிலும் செடிக்குச் செடி 1 மீ இடைவெளியில், செடிகளை நடவு செய்ய வேண்டும். கீழ்கண்ட அட்டவணைப்படி நுண் தெளிப்பு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.*

பாசனம் அளிக்கும் கால அளவு

| பருவம் | இயக்க வேண்டிய நேரம் |
|---|---|
| சனவரி – பிப்ரவரி | 1 மணி நேரம் |
| மார்ச் - ஜுன் | 1 மணி 30 நிமிடம் |
| ஜுலை – செப்டம்பர் | 1 மணி நேரம் |
| அக்டோபர் - டிசம்பர் | 45 நிமிடம் |

- நுண் தெளிப்பான் அமைப்பு முறை : சொட்டு நீர்ப் பாசன பக்க வாட்டுக் குழாய்களை (12 மி.மீ விட்டம்) 2மீ இடைவெளியில், ஒவ்வொரு இணை வரிசைக்கு இடையில் அமைத்து, அதில் 2மீ இடைவெளியில் ஒரு மணிக்கு 16 லிட்டர் தெளிக்கும் நுண் தெளிப்பான்களை அமைக்க வேண்டும். ஒவ்வொரு நுண் தெளிப்பானும் நான்கு செடிகளுக்கு நடுவில் அமைத்து நான்கு செடிகளுக்கு பாசனம் அளிக்கும்.

**நன்மைகள்**

- பாசன நீர் சேமிப்பு = 51 சதம்
  மேற்பரப்பு பாசனம் = 1134 மி.மீ./வருடம்
  நுண் தெளிப்புப் பாசனம் = 555 மி.மீ./வருடம்
- வழக்கமான பாசனப் பரப்பை, நுண் தெளிப்பு நீர்ப்பாசனம் அமைத்துப் பாசனம் அளிப்பதன் மூலம் இரு மடங்காக்கலாம்
- ஆட் செலவு, மின்சக்தி செலவு, களை எடுக்கும் செலவு மற்றும் இடுபொருள் செலவுகளில் சேமிப்பு

**பொருளாதாரம்**

- நுண் தெளிப்பு நீர்பாசனம் அமைக்க கூடுதல் செலவு = ரூ.49,000/எக்டர்
- பாசன அமைப்பின் பயன்படு காலம் 10 வருடம் என்று எடுத்துக் கொண்டால், ஒரு வருடத்துக்கான கூடுதல் செலவு = ரூ.9,800/எக்டர்
- கூடுதல் மகசூலினால் பெறப்படும் கூடுதல் வருமானம் = ரூ.2,238/எக்டர்
- நுண் தெளிப்புப் பாசனம் மூலம் குறைக்கப்படும் செலவுகள் (ஒரு வருடத்திற்கு)

| | | |
|---|---|---|
| நீர் பாய்ச்ச ஆள் செலவு குறைப்பு | = | ரூ. 9,000/எக்டர் |
| களைச் செலவு குறைப்பு | = | ரூ.9,600/எக்டர் |
| மொத்தம் குறையும் செலவுகள் | = | ரூ.18,600/எக்டர் |

| விபரம் | பாத்திப் பாசனம் | நுண் தெளிப்புப் பாசனம் |
|---|---|---|
| மொத்த வரவு (ரூ/எக்டர்) | ***73,854*** | ***76,092*** |
| மொத்த சாகுபடிச் செலவு (ரூ/எக்டர்) | ***20,854*** | ***15,250**** |
| நிகர வரவு (ரூ/எக்டர்) | ***53,000*** | ***60,842*** |

*நுண் தெளிப்புப் பாசன அமைப்புக்கான செலவு ரூ.**9,800**/எக்டர்/வருடம் சேர்க்கப்பட்டுள்ளது.

- இரண்டு பாசன முறைகளையும் ஒப்பிடுகையில், நிகர வரவு வேறுபாடு = ரூ.**60,842 –53,000** = ரூ.**7,842**/எக்டர்/வருடம் **(**கூடுதல் லாபம்**)**
- எனவே நுண் தெளிப்பு நீர்ப்பாசன முறைக்கான தனி வரவு செலவுக் கணக்குப்படி, பொருளாதார ரீதியாக நுண் தெளிப்புப் பாசனம் ஏற்புடையதாக உள்ளது.

## 4. MICRO SPRINKLER IRRIGATION FOR CURRY LEAF

### Details of Technology

- Micro sprinkler irrigation once in two days at 40 per cent pan evaporation (PE) under paired row planting with a spacing of 0.75 m between rows and 1.25 m between pairs of rows.
  Micro sprinkler irrigation schedule for sandy loam soils

| Season | Time of operation |
|---|---|
| January – February | 1 hr. |
| March – June | 1 hr. 30 min. |
| July – September | 1 hr. |
| October – December | 45 min. |

- In the case of lay-out, laterals are to be laid at 2 m interval and each micro sprinkler is to be erected in the centre of four plants within the paired row. The micro sprinklers of 16 lph are to be placed at 2 m spacing along the lateral.

**Benefits**

- Saving in irrigation water upto 51 per cent
  Surface irrigation : 1134 mm/year
  Micro sprinkler irrigation : 555 mm/year
- Area under irrigation will be twice
- Saving in energy, labour and other inputs

**Economics**

Added cost for micro sprinkler installation = Rs.49,000/ha
Taking the life of the system as ten years, added cost per ha per year = Rs.9,800/ha
Added returns per year = Rs.2,238/ha

Reduction in cost in micro sprinkler irrigation per year :
Value of labour saved due to reduced irrigation charges = Rs.9,000/ha
Reduction in weeding cost = Rs.9,600/ha
Total reduction in cost = Rs.18,600/ha

| Particulars (Rs./ha) | Surface irrigation | Micro sprinkler irrigation |
|---|---|---|
| Gross return | 73,854 | 76,092 |
| Total cost of cultivation | 20,854 | 15,250* |
| Net return | 53,000 | 60,842 |

* includes cost of micro sprinkler systems apportioned for ten years (Rs.49,000/ha.)

Net change in income (increase in profit) = (Rs.60842 - Rs.53,000)
= Rs.7,842/ha

Hence as per partial budgeting micro sprinkler irrigation is economically feasible

**Scientists responsible for release**

- P.Manickasundaram, P.K.Selvaraj, V.K.Duraisamy and C.Chinnusamy

## 5. நிழல் வலை குடிலில் தக்காளி உற்பத்தி நுட்பங்கள்

### தொழில் நுட்ப விளக்கம்

- *நிழல் வலை குடிலில், தக்காளி வீரிய ஒட்டு ரகத்தை சாகுபடி செய்யத் தேவையான ஒருங்கிணைந்த உர நிர்வாகத் தொழில் நுட்பம்*

  *வீரிய ஒட்டுரகம்* : *ருச்சி*

  *தக்காளி நிழல் குடில்* : *35 சதவீதம்*

  *இடைவெளி* : *80* x *40* x *60 செ.மீ (இரு வரிசை, வரிசை மற்றும் செடிகளின் இடைவெளி )*

- *உரமேலாண்மை*

  *அடிஉரம்* : *நேரடி உரத்தின் மூலமாக* 50:250:50 *கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள்*

  *உரநீர்ப்பாசனம்* : *தழை மற்றும் சாம்பல் சத்துக்கள் 200 கிலோ எக்டருக்கு நீரில் கரைத்து அளித்தல்*

### நன்மைகள்

- *நிழல் வலை குடிலில் சாகுபடி செய்வதன் மூலம் தக்காளியின் உற்பத்தியினை அதிகரிக்கலாம்*
- *பருவம் இல்லாத காலங்களில் உற்பத்தி இம் முறையின் முக்கிய பயனாகும்*
- *பூச்சி மற்றும் நோய்களைப் பரப்பும் காரணிகளின் தாக்குதல்களிலிருந்து பயிர் பாதுகாக்கப்படுவதால் பூச்சி மருந்து தெளித்தல் குறைந்து தரமான காய்கறிகள் கிடைக்கின்றன*
- *நிழல் வலை குடிலில் களைகள் மிகவும் குறைந்து காணப்படும்*
- *நிழல் வலை குடிலில் வருடம் முழுவதும் பயன்படுத்தி அந்தந்தக் காலங்களில் அதிக விலை கிடைக்கக்கூடிய காய்கறி பயிர்களை சாகுபடி செய்யலாம்*

### பொருளாதாரம்

- *மகசூல் (டன்/ எக்டர்)* : 96
- *வரவு / செலவு விகிதம்* : 3.07

## 5. SHADE NET CULTIVATION WITH FERTIGATION IN TOMATO

### Details of Technology

- The influence of shade and fertigation on growth and productivity of tomato were standardized.
  Hybrid : Ruchi
  Shade : 35 per cent
  Spacing : Paired row planting 80x40x60 cm (between pairs, rows and plants)
- Fertilizer application
  Basal : NK each @ 50 kg/ha and P at 250 kg/ha through straight fertilizers
  Fertigation : NK each @ 200 kg/ha through straight fertilizers

### Benefits

- Fetches a premium price in the market where there is demand for the fruits during summer.
- Shade net cultivation helps to grow tomato under protected environment to increase the productivity during off seasons.
- Besides high productivity the shade net also acts mechanical barriers to pest and vectors of viral diseases.
- Microclimate in the shade net will minimize the crop loss due to abiotic stresses and also reduces the weed intensity greatly.
- Shade net can be utilized during rainy season also vegetable crops with higher marketable price can be grown in order to fetch higher returns which provide year round production.

### Economics

- Yield (t/ha) : 96.0
- B/C ratio : 3.07

### Scientists responsible for release

- S.Natarajan, E.Vadivel, L.Pugalendhi, M.Kavitha, S.Sasikala and K.Srinivasan

# 6. பசுமைக் கூடாரத்தில் செவ்வந்தி கொய் மலர் சாகுபடி தொழில் நுட்பங்கள்

## தொழில் நுட்ப விளக்கம்

- பசுமைக் கூடாரத்தில் செவ்வந்தி மலர் சாகுபடிக்கு ஏற்ற வளர்ச்சி ஊடகம், நீர்ப்பாசன வீதம், உரத்தேவை, ஒளிநேரம் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| இரகம் | : | எல்லோ ரீகன் |
| பசுமைக் கூடாரத்தின் பரப்பளவு | : | 1000 சதுர மீட்டர் |
| வளர் ஊடகம் | : | ஒரு பங்கு மண், ஒரு பங்கு மக்கிய தொழு உரம், இரு பங்கு செறிவூட்டப்பட்ட தென்னை நார்க் கழிவு |
| நீர்ப் பாசனம் | : | 40 கிலோ பாஸ்கல் |
| உரமிடல் | : | சதுர மீட்டருக்கு 10:20:10 கிராம் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து என்ற அளவில் அடியுரமாகவும், பூ மொட்டு விரியும் நிலையின் போது 10 கிராம் தழைச்சத்து மேலுரமாகவும் இடுதல் |
| நடவு இடைவெளி | : | 20 x 15 செ.மீ. |
| ஒளி நேரம் | : | நாளொன்றுக்கு இருள் 14 மணி நேரம், வெளிச்சம் 10 மணி நேரம் |
| ஒளிச் செறிவு | : | 3000 லக்ஸ் |
| வெப்பநிலை | : | 25 -35$^{0}$ செ |
| ஒப்பீட்டு ஈரப்பதம் | : | 60-70 விழுக்காடு |

**நன்மைகள்**

- *கொய் மலர்களின் உற்பத்தித் திறன் மற்றும் தரம் மேம்படுகிறது.*
- *பாதிப்பு ஏற்படுத்தும் பூச்சி மற்றும் நோய்களின் நுழைவு தடுக்கப்படுகிறது. இதனால் தீங்கு விளைவிக்கும் பூச்சி மற்றும் பூஞ்சாணக் கொல்லிகளின் பயன்பாடு குறைகிறது.*
- *பாதுகாக்கப்பட்ட சூழல் நிலவுவதால் வானிலைக் காரணிகளால் ஏற்படும் பாதிப்பு தவிர்க்கப்படுகிறது.*
- *ஒளிக்காலத்தைச் சீராக்கி சாகுபடி மேற்கொள்ளப்படுவதால் பருவமற்ற சூழலிலும் உற்பத்தி செய்யலாம்.*
- *சுற்றுசூழல் நேயம் மிக்க தொழில்நுட்பம் என்பதால் தீங்கு விளைவிக்கும் வேதிப் பொருட்களின் பயன்பாடு தடுக்கப்படுகிறது.*

**பொருளாதாரம்**

- *ஒரு சதுர மீட்டருக்கு தோராயமாக **240** மலர்க் கொத்துக்களை **(**கோடை காலத்தில் **239.3**, குளிர் காலத்தில் **240.3)** பெறலாம். அதாவது மலர்க் கொத்து ஒன்றுக்கு சராசரியாக **4** மலர்களை **(**கோடை காலத்தில் **3.54**, குளிர் காலத்தில் **3.56)** பெறலாம்.*
- *ஆயிரம் சதுர மீட்டருக்கு மொத்த வருவாயாக ரூ.*15,12,000 /- *செலவு ரூ.* 4,39,200 /- *போக நிகர வருவாயாக ரூ.* 10,72,800 /- *ரூபாயும் பெறலாம். ஒரு ரூபாய் செலவு செய்தால்* 3.44 *ரூபாய் வருவாயாகப் பெறலாம்.*

## 6. PROTECTED CULTIVATION TECHNIQUES FOR CUT CHRYSANTHEMUM

### Details of Technology

- The growing medium, irrigation regime, fertilizer application and photoperiod regulation for Cut Chrysanthemum under poly house conditions were standardized

| | | |
|---|---|---|
| Variety | : | Yellow Regan |
| Area of Poly house | : | 1000 $m^2$ |
| Growing Media | : | Soil + Compost + Cocopeat @1:1:2 |
| Irrigation | : | 40 kPa |
| Spacing | : | 20 x 15 cm |
| Nutrition | : | 10:20:10 g/$m^2$ NPK through soil application as basal, i.e.50% N as basal and remaining 50% N i.e. 10 g/$m^2$ as top dressing at flower bud opening stage. |
| Spacing | : | 20 x 15 cm |
| Photoperiod | : | 14 hours dark and 10 hours light |
| Light intensity | : | 3000 Lux |
| Temperature | : | 25 -$35^0$ C |
| Relative humidity | : | 60-70% |

### Benefits

- Ensures high productivity with good quality flowers.
- Act as a mechanical barrier to pests and diseases.
- Microclimate regulation will reduce the crop loss due to climatic factors.
- An eco-friendly cultivation system, which reduces the use of harmful chemicals.
- Beneficial for off season production by providing short day conditions.

**Economics**

- This technology helps the grower get an average of 240 sprays/$m^2$ (239.3 during summer and 240.3 in winter) with 3.54 flowers /spray in summer and 3.56 / spray in winter

| | | |
|---|---|---|
| Gross returns | : | Rs.15,12,000 /- |
| Cost of production | : | Rs.4,39,200 /- |
| Net return | : | Rs.10,72,800 /- |
| BC Ratio | : | 1: 3.44 |

**Scientists responsible for release**

- M.Jawaharlal, T.Arumugam, V.A. Sathiyamoorthy, R.Arulmozhiyan and E.Vadivel

## 7. புத்துணர்ச்சி ஊட்டும் நெல்லி துருவல்கள்

### தொழில் நுட்ப விளக்கம்

- *நல்ல தரமான நெல்லிக்காய்களை தேர்ந்தெடுத்து அதை குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இயந்திரத்தின் உதவியுடன் கொட்டையை நீக்கி சிறுதுண்டுகளாக்கவும். கீழே கொடுக்கப்பட்டுள்ளள ஏதாவது ஒரு திரவத்தில் 48 மணி நேரம் ஊறவைக்கவும்.*
    - நெல்லிக்காய் + எலுமிச்சை (நெல்லிக்காய் - 100 கி, எலுமிச்சை சாறு – 15 %, உப்பு -5%)
    - நெல்லிக்காய் + இஞ்சி (நெல்லிக்காய் -100 கி, இஞ்சி–5%, உப்பு- 5%)
    - நெல்லிக்காய் + மிளகு (நெல்லிக்காய் -100 கி, மிளகு–5%, உப்பு- 5%)
    - நெல்லிக்காய் + எலுமிச்சைச்சாறு + மிளகு (நெல்லிக்காய்-100 கி, எலுமிச்சைச்சாறு – 15%, மிளகு – 5% உப்பு - 5%)
    - நெல்லிக்காய் எலுமிச்சைச்சாறு + இஞ்சி (நெல்லிக்காய் - 100 கி, எலுமிச்சைச்சாறு – 15%, இஞ்சி – 5%, உப்பு 5%)
    - நெல்லிக்காய் + மிளகு + இஞ்சி (நெல்லிக்காய் - 100 கி, மிளகு, இஞ்சி - 5%, உப்பு - 5%)

➢ நெல்லிக்காய் + மிளகு + இ ஞ்சி + எலுமிச்சை (நெல்லிக்காய் - 100கி, மிளகு–3 %, இஞ்சி –3%, எலுமிச்சைச்சாறு –15% , உப்பு - 5%)

- பின் 60-80$^0$ செல்சியஸில் மின் உலர்த்தியில உலர்த்தி, காற்று புகாமல் அடைக்கவும்.

**நன்மைகள்**

- நெல்லிக்கனியை பதப்படுத்துதலின் மூலம் விவசாயிகளின் மத்தியில் நெல்லிக்கனி உற்பத்தியும் வருமானமும் அதிகரிக்கப்படுகிறது.
- பாக்கு மற்றும் புகையிலை சுவைக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு இது ஒரு நல்ல மாற்றுப் பொருள் ஆகும். மேலும் உயிர்சத்துக்கள் மற்றும் தாது பொருட்கள் அதிகமுள்ளதால் உடல் நலமும் பாதுகாக்கப்படுகிறது.
- நெல்லிக்கனியை பதப்படுத்துவதின் மூலம் சுயதொழில் பெருகவும் வேலைவாய்ப்புகள் பெருகவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

**பொருளாதாரம்**

- புத்துணர்ச்சி ஊட்டும் நெல்லி துருவல்கள் செய்ய ஆகும் செலவு : ரூபாய் 50 / கிலோ

## 7. AONLA BASED MOUTH FRESHENER

### Details of Technology

- Select matured, firm and fibreless aonla fruits and wash in cold water. Deseed the fruits with aonla deseeder and slice into small pieces with vegetable slicer. Weigh the desired spice combinations and mix with aonla pieces. Soak it for 48 hrs, mix once or twice during curing.
  - i. Aonla + lime + salt (Aonla 100 g, lime juice 15 %, salt 5%)
  - ii. Aonla + ginger + salt (Aonla 100 g, ginger 5 %, salt 5%)
  - iii. Aonla + pepper + salt (Aonla 100 g, pepper 5 %, salt 5%)

iv. Aonla+ lime + ginger + salt (aonla 100g, lime juice 15%, ginger 5%, salt 5%)
v. Aonla + lime + pepper +salt(Aonla 100 g, lime juice 15%, pepper 5%, salt 5%)
vi. Aonla + pepper + ginger + salt (aonla 100 g, pepper and ginger 5%, salt 5%)
vii. Aonla + pepper + ginger + lime + salt (aonla 100 g, pepper 3%, ginger 3%, lime juice 15, salt 5%)

- Dry it in a cabinet drier at 60 to 80$^0$C for 4 to 5 hrs. Pack it and store in an airtight container.

**Benefits**

- Value addition of aonla will increase the production and the economic value of the crop among the farmers
- Dehydrated aonla supari will be the good substitute for chewing areca nut and tobacco and it will help to maintain the health profile
- Processing of aonla will lead to additional income for growers and entrepreneurs

**Economics**

- Cost of production : Rs.50/kg

**Scientists responsible for release**

- Saraswathy Eswaran, D.Malathi and G.Puspha

# புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் மேலாண்மை தொழில் நுட்பங்கள்

# NEW CROP VARIETIES, FARM IMPLEMENTS AND MANAGEMENT TECHNOLOGIES

## 2006

**தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்**
**கோயமுத்தூர் - 641 003**

# புதிய பயிர் இரகங்கள், பண்ணைக்கருவிகள் மற்றும் மேலாண்மை தொழில் நுட்பங்கள்

# NEW CROP VARIETIES, FARM IMPLEMENTS AND MANAGEMENT TECHNOLOGIES 2006


**தொகுப்பு**

*முனைவர்.சி.ராமசாமி*
*முனைவர்.பா.சந்திரசேகரன்*
*முனைவர்.சாமி.இராமநாதன்*
*முனைவர்.கு.கந்தசாமி*
*முனைவர்.நா.நடராஜன்*
*முனைவர்.மெய்.தட்சிணாமூர்த்தி*
*முனைவர்.போ.சுப்ரமணியன்*
*முனைவர்.சி.ரா.சின்னமுத்து*

**COMPILED BY**

**Dr.C.Ramasamy**
**Dr.B.Chandrasekaran**
**Dr.S.Ramanathan**
**Dr.G.Kandasamy**
**Dr.N.Natarajan**
**Dr.M.Dhakshinamoorthy**
**Dr.P.Subramanian**
**Dr.C.R.Chinnamuthu**



*ஆராய்ச்சி இயக்ககம்*
*தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்*

**DIRECTORATE OF RESEARCH**
**TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY, COIMBATORE – 641 003**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்


**முனைவர் சி.ராமசாமி**
**துணைவேந்தர்**

**கோயமுத்தூர் -641 003**
**தமிழ்நாடு, இந்தியா.**


## அணிந்துரை

தமிழக உழவர் பெருமக்களுக்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் புதிய பயிர் இரகங்கள், பண்ணைக்கருவிகள் மற்றும் மேலாண்மை தொழில் நுட்பங்களை வெளியிட்டு வருகின்றது. இவ்வகை புதிய இரகங்களை விவசாயிகள் ஏற்று பயிரிட்டும், புதிய பண்ணைக் கருவிகளை பயன்படுத்தியும், மேலாண்மை தொழில்நுட்பங்களை கடைபிடித்தும் சிறந்த பயனடைந்து வருகின்றனர்.

நடைபெறுகின்ற 2006ம் ஆண்டில் வேளாண்மைப் பயிர்களில் 11 இரகங்களும், தோட்டக்கலைப் பயிர்களில் 3 இரகங்களும், 7 பண்ணைக் கருவிகளும், 7 மேலாண்மைத் தொழில்நுட்பங்களும் வெளியிடப்படுகின்றன. இப்புதிய இரகங்கள், பண்ணைக் கருவிகள், மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் உழவர் பெருமக்களுக்கு நிச்சயம் பேருதவியாக இருக்கும்.

இக்கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் உழவர் பெருமக்களுக்கு மட்டுமின்றி வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கும் உதவியாக இருக்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தருணத்தில் இப்புதிய பயிர் இரகங்களையும், வேளாண் கருவிகளையும், மேலாண்மை தொழில்நுட்பங்களையும் உருவாக்க உதவிய பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களை மனமார பாராட்டுகின்றேன்.

**(சி. ராமசாமி)**

*7, செப்டம்பர் 2006*
*கோயமுத்தூர் - 641 003*

## TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY

**Prof.C.RAMASAMY**
**Vice-Chancellor**

**Coimbatore 641 003**
**Tamil Nadu, India**

## FOREWORD

*Tamil Nadu Agricultural University is releasing new varieties, farm implements and management technologies every year for the betterment of farming community in Tamil Nadu. These new varieties, farm implements and management technologies are being adopted by the farmers and get benefited.*

*This year TNAU released 11 varieties in agricultural crops, 3 in horticultural crops, 7 farm implements and 7 management technologies will be definitely useful to the farmers.*

*The information given in this booklet is not only useful to farmers but also Agricultural Extension Officers. At this juncture I whole heartedly congratulate the scientists who have contributed for the development of these new varieties, implements and management technologies.*

September 9, 2006
Coimbatore – 641 003

***(C.Ramasamy)***

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வீரிய ஒட்டு நெல் - கோஆர்எச் 3 | 1 |
| 2. | நெல் - ஆர்எம்டி (ஆர்) 1 | 3 |
| 3. | நெல் - டிபிஎஸ் (ஆர்) 4 | 5 |
| 4. | வீரிய ஒட்டு மக்காச்சோளம் - கோ எச் (எம்) 5 | 7 |
| 5. | சாமை - கோ (சாமை) 4 | 9 |
| 6. | பாசிப்பயறு – கோ (ஜிஜி) 7 | 11 |
| 7. | பனிப்பயறு – டிஎம்வி (எம்பி) 1 | 13 |
| 8. | நிலக்கடலை - டிஎம்வி (ஜிஎன்) 13 | 15 |
| 9. | சூரியகாந்தி – கோ(எஸ்எப்வி) 5 | 17 |
| 10. | பருத்தி – கேசி 3 | 19 |
| 11. | கரும்பு - கோக (எஸ்சி) 23 | 21 |
| 12. | தக்காளி - கோஎல்சிஆர்எச் 3 | 23 |
| 13. | மிளகாய் - கேகேஎம் (சிஎச்) 1 | 25 |
| 14. | தைம் - ஊட்டி (டிவி) 1 | 27 |
| 15. | தென்னை மரம் ஏறும் கருவி | 29 |
| 16. | இரு வரிசை விரல் வடிவ சுழலும் களையெடுக்கும் கருவி | 30 |
| 17. | நெல் மற்றும் உரம் இடும் கருவி | 31 |
| 18. | டிராக்டரால் இயங்கும் கரும்பு நடவு செய்ய குழி தோண்டும் கருவி | 32 |

| | | |
|---|---|---|
| *19.* | கையினால் இயங்கும் நெல்லி கொட்டை நீக்கும் கருவி | *33* |
| *20.* | கரும்பு கரணை வெட்டும் கருவி | *34* |
| *21.* | சிறிய கூட்டு நெல் அறுவடை இயந்திரம் | *35* |
| *22.* | விதை மற்றும் உரம் இடும் கருவியை பயன்படுத்தி மானாவாரி நேரடி நெல் விதைப்பு | *37* |
| *23.* | இளம் வயது நாற்றுக்களை திருந்திய நெல் சாகுபடி முறையில் நடுவதற்கு உகந்த திருந்திய நெற்பயிர் பாய் நாற்றங்கால் | *40* |
| *24.* | சொட்டு நீர் உர பாசனம் மற்றும் குழி நடவு முறையில் கரும்பு சாகுபடி | *44* |
| *25.* | கறிவேப்பிலைக்கு நுண் தெளிப்பு நீர்ப்பாசனம் | *47* |
| *26.* | நிழல் வலை குடிலில் தக்காளி உற்பத்தி நுட்பங்கள் | *51* |
| *27.* | பசுமைக் கூடாரத்தில் செவ்வந்தி கொய் மலர் சாகுபடி தொழில் நுட்பங்கள் | *53* |
| *28.* | புத்துணர்ச்சி ஊட்டும் நெல்லி துருவல்கள் | *56* |

# CONTENTS


| | | Page No. |
|---|---|---|
| 1. | Hybrid Rice - CORH 3 | 2 |
| 2. | Rice - RMD (R) 1 | 4 |
| 3. | Rice - TPS (R) 4 | 6 |
| 4. | Hybrid Maize - COH (M) 5 | 8 |
| 5. | Samai - CO (Samai) 4 | 10 |
| 6. | Greengram - CO (Gg) 7 | 12 |
| 7. | Mothbean - TMV (Mb) 1 | 14 |
| 8. | Groundnut - TMV (Gn) 13 | 16 |
| 9. | Sunflower - CO (SFV) 5 | 18 |
| 10. | Cotton - KC 3 | 20 |
| 11. | Sugarcane - COC (SC) 23 | 22 |
| 12. | Tomato - COLCRH 3 | 24 |
| 13. | Chilli - KKM (Ch) 1 | 26 |
| 14. | Thyme - OOTY (Tv 1) | 28 |
| 15. | Coconut tree climber | 29 |
| 16. | Two row finger type paddy rotary weeder | 30 |
| 17. | Seed cum fertilizer drill for paddy | 31 |
| 18. | Tractor operated pit digger for sugar cane planting | 32 |
| 19. | Hand operated aonla seed remover | 34 |
| 20. | Sugarane sett cutter | 35 |

| | | |
|---|---|---|
| 21. | Mini combine harvester for paddy | 36 |
| 22. | Direct seeding of rainfed rice using seed cum fertilizer seed drill | 38 |
| 23. | Modified rice mat nursery for early transplantation under modified sri method of cultivation | 42 |
| 24. | Pit method of sugarcane planting under drip fertigation system | 46 |
| 25. | Micro sprinkler irrigation for curry leaf | 49 |
| 26. | Shade net cultivation with fertigation in tomato | 52 |
| 27. | Protected cultivation techniques for cut chrysanthemum | 55 |
| 28. | Aonla based mouth freshener | 57 |